வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 24.04.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 108 பக்கங்கள் : 08


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

நிலக்கரி ஊழல் விவகாரம்:

## முழு அமைச்சரவையும் பதவி விலக வேண்டும்!

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்து



கொழும்பு, ஏப். 24

தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவில் அமைச்சர் மாத்திரம் தவறு செய்யவில்லை, ஒட்டுமொத்த அரசாங்கமும் அமைச்சரவையுமே தவறு செய்துள்ளது. அதனால் இந்த நாட்டின் சட்டம், பாரம் பரியம் மற்றும் மக்களுக்கு

07

## தமிழக சட்டசபை தேர்தலில் வரலாறு காணாத சாதனை!

85%
வாக்குப்பதிவு

சென்னை, ஏப். 24

தமிழ்நாட்டின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நேற்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது.

07

# ரணில், ராஜபக்ஷ, சஜித் போன்றோர் மீண்டும் ஆட்சிக்கு வரப்போவதில்லை

'டான்' விசேட செவ்வியில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

யாழ்ப்பாணம், ஏப்ரல். 24


"மீண்டும் ஒருமுறை இந்த நாட்டில் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ, சஜித் போன்றவர்கள் ஆட்சிக்கு வரப்போவதில்லை. அவர்கள் ஆட்சி அமைக்கும் நிலையில் இப்போது இல்லை. ஆகையால் தமிழ் மக்கள் பயப்படத் தேவையில்லை."

இவ்வாறு தெரிவித்தார் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

இந்த அரசு கவிழும். அதற்கு பின்னர் வரும் அரசுகள் என்ன செய்வார்களோ தெரியாது என யாரும் அச்சப்படவேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர் டான் தொலைக்காட்சி தலைமை அலுவலகத்துக்கும்

07



## அவுஸ்திரேலியாவுக்கு செல்லவேண்டிய நிதியே ஊடுருவிகளின் கணக்குகளுக்கு!

பிரதி நிதியமைச்சர் விசேட அறிக்கை

கொழும்பு, ஏப். 24

நிதி அமைச்சின் கீழ் இயங்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கணினி கட்டமைப்புக்குள் அங்கீகரிக்கப்படாத நபர் பிரவேசித்து முன்னெடுத்த நிதித் திருட்டுச்சம்பவம் தொடர்பில் சட்ட அமுலாக்க நிறுவனங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு செல்ல வேண்டிய நிதி ஊடுருவிகள் கணக்குகளுக்கு திசை திருப்பப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அவுஸ்திரேலிய ஏற்றுமதி நிதி

07

## இலங்கையின் பணம் செலுத்தலில் முறைகேடு நடந்ததை உறுதி செய்துள்ள அவுஸ்திரேலியா!

கொழும்பு, ஏப். 24

அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைகளில் உள்ள முறைகேடுகள் குறித்து, தூதரகமும் இலங்கையின் நிதி அமைச்சும் அறிந்திருப்பதாக இலங்கையில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக இலங்கை அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியுள்ளதாகவும், அந்த விசாரணைக்கு உதவிவரும் அவுஸ்திரேலிய அதிகாரிகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்படுவதாகவும் அவுஸ்திரேலிய தூதரகம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மைக்கான பாதைக்கு ஆதரவளிப்பதில்

07

## சாவகச்சேரி விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 24

சாவகச்சேரியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். திருநகர் பகுதியை சேர்ந்த செல்வம் றொபின் (வயது-43) என்பவரே

07

## அரச உத்தியோகத்தர்களின் மொழி அறிவு குறித்து மீளாய்வு

நீதி அமைச்சர் ஹர்ஷன கோரிக்கை

கொழும்பு, ஏப். 24

மொழிகளைக் கற்றுக்கொள்ளும் அரச உத்தியோகத்தர்களின் மொழி அறிவு குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டும் என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் அமைச்சருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

07

## அபகரிக்கப்பட்ட 2.5 மில்லியன் டொலரை மீண்டும் பெற்றுக்கொள்ள அரசு முயற்சி!

நிதி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

சைபர் குற்றவாளிகளால் நிதி அமைச்சிலிருந்து அபகரிக்கப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களில், முடிந்த வரை பெருமளவான தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சின் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஹெக்கர்கள் மின்னஞ்சல் ஊடாக அமைச்சின் கட்டமைப்புக்குள்

07

## வடக்கு மணல் விநியோகம் குறித்து பொது நடைமுறையை உருவாக்குக!

மாகாண ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஏப். 24

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மணல் விநியோகத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அதனை முறைப்படுத்தி, அனைத்து மன்றங்களுக்கும் பொதுவானதொரு நடைமுறையை உடனடியாக அறிமுகப்படுத்துமாறு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், உள்ளூராட்சி ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும்,

07

## அல்லைப்பிட்டி சூட்டில் சிறுவன் மரணம் சந்தேகநபர்களை கைது செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 24

அல்லைப்பிட்டியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் சிறுவன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நம்பிக்கை தரும் வகையில் விசாரணைகளை முன்னெடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் அனீபா ரஜீவ் மத்திய குற்ற புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் கட்டளையை மீறி ஹைஏஸ் ரக

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சசீந்திர ராஜபக்ஷவை கைது செய்ய உத்தரவு!

## 20 இலட்சம் டொலர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஏப். 24

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் எயார்பஸ் கொடுக்கல் வாங்கலின்போது 20 இலட்சம் அமெரிக்க டொலர் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் விவகாரத்தில், நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் சசீந்திர ராஜபக்ஷவைக் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தின்போது இடம்பெற்ற இந்த எயார்பஸ் கொள்வனவு தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே நீதவான் இசுரு நெத்திகுமார இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.



சசீந்திர ராஜபக்சவிற்கான பிடியாணையை நடைமுறைப் படுத்துவதில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஏன் காலதாமதம் செய்கின்றது என இதன் போது நீதவான் கேள்வி எழுப்பினார்.

அதேவேளை, இந்த ஊழல் விவகாரத்துடன் தொடர்புடைய சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்கவுக்கும் எதிராக நீதவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

எயார்பஸ் நிறுவனத்திடம் இருந்து 20 இலட்சம் அமெரிக்க டொலர் இலஞ்சம் பெற்றமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் குறித்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(அ)

## திருகோணமலை எரிசக்தி மையத் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படாது!

கொழும்பு, ஏப். 24

இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள எரிவாயு குழாய் மற்றும் திருகோணமலை எரிசக்தி மையத் திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஸ்ணனின் அண்மைய இலங்கை விஜயத்தின்போது இத்திட்டங்கள் குறித்து மீண்டும் கலந்துரையாடப் பட்டபோதிலும், ஆரம்ப கட்டப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க, முன்மொழியப் பட்டுள்ள எரிவாயு குழாய் திட்டம் தொடர்பாக இதுவரை சாத்தியக்கூறு ஆய்வுகள் கூட முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

அதேபோல், திருகோணமலை எரிசக்தி மையத் திட்டம் தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளபோதிலும், அதற்கு அப்பால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2025 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின்போது முதன்முதலில் பேசப்பட்ட இத்திட்டங்கள் குறித்துத் தற்போது மீண்டும் ஆராயப்பட்டுள்ள போதிலும், இவற்றை நிறைவு செய்வதற்கான காலக்கெடு எதுவும் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

## 457 அரச நிறுவனங்களின் செயல்பாடு; விரிவாக ஆய்வு செய்கிறது கோப் குழு

கொழும்பு, ஏப். 24

பாராளுமன்றப் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் அதாவது கோப் குழுவின் அதிகார வரம்பிற்குள் உள்ள 457 அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தற்போது விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அக்குழுவின் தலைவர் கலாநிதி நிஷாந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுகளின்போது ஏதேனும் நிதி முறைகேடுகள் அல்லது ஊழல்கள் கண்டறியப்பட்டால், அவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நேரடியாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அல்லது லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய காலங்களில் "கோப்" குழுவின் அறிக்கைகள் பாராளுமன்றத்திடம் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டு வந்த நிலையில், அண்மையில் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய, பாரிய ஊழல்கள் குறித்து நேரடியாகப் புலனாய்வு அமைப்புகளுக்கு அறிவிக்கும் அதிகாரம் தற்போது அக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாதியில் நிறுத்தப்பட்ட பல விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த கலாநிதி நிஷாந்த சமரவீர, அரச நிறுவனங்களில் மக்களின் வரிப்பணம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வலியுறுத்தினார்.

(அ)

## சம்பந்தப்பட்ட நாட்டுக்குப் பதிலாக 3ஆம் தரப்பிடம் கடன் செலுத்திய அரசு!

### உடனடி விசாரணை நடத்தக் கோருகிறார் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன

கொழும்பு, ஏப். 24

இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடனுக்கான தவணைக் கட்டணமான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் சம்பந்தப்பட்ட நாட்டுக்குப் பதிலாகத் தற்காலிகமாக ஒரு மூன்றாவது தரப்புக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகப் பாரிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த மோசடி குறித்து பாராளுமன்றம் உடனடியாகத் தலையிட்டு விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

2025 டிசெம்பர் முதல் 2026 ஜனவரி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இந்தத் தவறான பணப்பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட சர்வதேசத் தொழில்நுட்பக் குழுவின் விசாரணையைத் தொடர்ந்து, திறைசேரியின் இரண்டு பணிப்பாளர்கள், இரண்டு பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் ஒரு சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப அதிகாரி என ஐவர் தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

திறைசேரி செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளரின் பங்களிப்பின்றி இவ்வளவு பாரிய தொகையை பரிமாற்றம் செய்ய முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, இது குறித்து சபாநாயகர் மற்றும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் அரச கடன் மேலாண்மை அலுவலகத்தின் கீழ் இந்த கொடுக்கல் வாங்கல்கள் கொண்டு வரப் பட்ட பின்னரே இவ்வாறான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக "சுயாதீன சட்டத்தரணிகள்" அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

### 323 கொள்கலன்கள் விடுவிப்பு;

## பாராளுமன்றக் குழு முன்னிலையில் ஜனாதிபதி சாட்சியமளிக்கவேண்டும்!

கொழும்பு, ஏப். 24

கொழும்புத் துறைமுகத்திலிருந்து எவ்வித பரிசோதனைகளும் இன்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தும் பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சாட்சியமளிக்க அழைக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியையும், குறித்த காலப்பகுதியில் துறைமுக அமைச்சராகப் பதவி வகித்த பிமல் ரத்நாயக்க மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடிதுவாக்கு ஆகியோரையும் இந்த விசாரணைக் குழுவிடம் முன்னிலையாகுமாறு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான அஜித் பி. பெரேரா, தயாசிறி ஜயசேகர, முஜிபுர் ரஹ்மான் மற்றும் டி.வி. சாணக்க ஆகியோரால் கையொப்பமிடப்பட்ட இந்தக் கடிதம், குறித்த குழுவின் தலைவரான நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கட்டாய பரிசோதனைகள் இன்றி இவ்வளவு பாரிய எண்ணிக்கையிலான கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமைக்கான சூழல் மற்றும் அதன் பின்னணி குறித்துக் கண்டறிவதே இந்த விசாரணைக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

(அ)

## டீசல் கப்பல் வருகிறது

கொழும்பு, ஏப். 24

நாட்டுக்குத் தேவையான எரிபொருளைத் தடையின்றி விநியோகிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மற்றுமொரு டீசல் கப்பல் எதிர்வரும் ஏப்ரல் 27 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவிக்கையில்,

வரவுள்ள டீசல் கப்பலில் 9,500 மெற்றிக் தொன் டீசல் அடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த மாத இறுதிக்குள் மற்றுமொரு பெற்றோல் கப்பலும் நாட்டை வந்தடையவுள்ளது.

அந்தப் பெற்றோல் கப்பலில் மொத்தம் 35,000 மெற்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

(அ)

## பயங்கரவாத செயல்பாடுகளை தடுக்க நிதித் தடைகளை வலுப்படுத்திய அரசு!

கொழும்பு, ஏப். 24

பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதற்கு நிதி வழங்குவதைத் தடுக்கும் நோக்கில், இலக்கு வைக்கப்பட்ட நிதித் தடைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் அல்லது அமைப்புகளின் வங்கிச் கணக்குகள் உடனடியாக முடக்கப்படுவதுடன், அவர்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பயன்படுத்துவது, விற்பனை செய்வது அல்லது குத்தகைக்கு விடுவது போன்ற அனைத்து நிதிச் செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கு இணங்க இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை வெளிவிவகார அமைச்சரினால் இந்த நிதித் தடைகள் விதிக்கப்படும் அதேவேளை, அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாகப் பாதுகாப்புச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
24.04.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தீபச்செல்வனின் புத்தகங்கள்

சுதந்திர இலங்கை அதன் 78 வருடகால வரலாற்றில் தென்னிலங்கை இளைஞர்களின் இரு ஆயுதக் கிளர்ச்சிகளையும் இனப் பிரச்சினையின் விளைவான மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரையும் கடந்து வந்திருக்கிறது. இவற்றில் மாண்டு போனவர்களின் எண்ணிக்கை இன்று வரை சரியாகத் தெரியாது. பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் இருந்து அவல அனுபவங்கள் மறைந்து போகவும் இல்லை.

ஆயுதக் கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கிய ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தி என்ற புதிய அவதாரத்தில் அதிகாரத்துக்கு வந்திருக்கிறது. என்றாலும், பெரும்பான்மையின இளைஞர்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வந்து விடவில்லை.

உள்நாட்டுப் போரில் விடுதலை புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு 17 வருடங்கள் கடந்துவிடப் போகின்ற நிலையிலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. 38 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் நேரடித் தலையீட்டை தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபைகளும் கூட இதுவரையில் முறையாக இயங்கவில்லை.

போரின்போதும் அதன் இறுதிக்கட்டத்திலும் காணாமல்போன தங்களது உறவுகளுக்கு நேர்ந்த கதியை அறிய முடியாமல் வடக்கு. கிழக்கில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தவிக்கின்றன. போரின் விளைவுகளில் இருந்து இன்னமும் விடுபடமுடியாமல் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் வழமை வாழ்வுக்கு திரும்பமுடியாமல் உடற்காயங்களுடனும் மனக்காயங்களுடனும் நொண்டிக் கொண்டிருக்கின்றன.

1983 கறுப்பு ஜுலையையையும் போரயும் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறிய இலட்சக் கணக்கானவர்கள் "புலம் பெயர் தமிழர்கள்" என்ற அடையாளத்துடன் நவீன யூதர்கள் போன்று பல்வேறு நாடுகளில் சிதறி வாழ்கிறார்கள்.

இத்தகைய அவலங்கள் நிறைந்த பின்புலத்தில், தென்னிலங்கையையும் வடக்கு, கிழக்கையும் சேர்ந்த சமூக அக்கறையுடைய அரசியல் ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தவர்கள் மற்றும் கலை இலக்கியவாதிகளின் படைப்புகளில் கடந்த காலத் துன்பியல் நிகழ்வுகள் தாக்கத்தைச் செலுத்துவது என்பது தவிர்க்க முடியாதது. அண்மைக்கால வரலாற்றை மண்ணுக்குள் புதைக்க முடியாது.

கிளிநொச்சியை சேர்ந்த இளம் எழுத்தாளர் தீபச்செல்வன் பிரதீபன் இந்தியாவில் இருந்து தருவித்த நூல் தொகுதிகள் சுங்கத் திணைக்களத்தினால் சில வாரங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விவகாரம் தோற்றுவித்த சச்சசையே மேற்கூறப்பட்ட கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு இன்று ஈழநாட்டை நிர்ப்பந்திக்கின்றன.

தனது நூல்களை மீட்பதற்கு தீபச்செல்லன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பல ஊடகவியலாளர்கள், கலை இலக்கியவாதிகள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் குரல் கொடுப்பது மிகவும் மகிழ்ச்சி தருகிறது. கலாசார அமைச்சில் இடம்பெற்ற கலந்தாராய்வுக்கு பிறகு அவரின் நூல்களில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தீபச்செல்வனின் நூல்களில் பாதகமான விடயங்கள் இருக்கின்றனவா என்று பரிசீலிக்கும் பொறுப்பை பல தமிழ் எழுத்தாளர்களிடம் ஒப்படைக்கப்போவதாக கலாசார அமைச்சர் சுனில் ஹினிதும செனவி அறிவித்ததை நோக்கும்போது அதற்கு முன்னதாக சுங்கத் திணைக்களம் என்ன காரணத்தின் அடிப்படையில் நூல்களை தடுத்து வைக்கத் தீர்மானித்தது என்ற கேள்வி எழுகிறது.

தென்னிலங்கை கிளர்ச்சிகளை பற்றியும் உள்நாட்டுப் போரைப் பற்றியும் இராணுவ அதிகாரிகள், முன்னாள் போராளிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்று பலர் நூல்களை மூன்று மொழிகளிலும் எழுதியிருக்கிறார்கள். தேசிய பாதுகாப்பு, நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறைமை குறித்து ஒவ்வொருவரும் தாங்கள் எதிர்கொண்ட அனுபவங்களின் அடிப்படையிலேயே எழுதியிருக்கிறார்கள். சில படைப்புக்கள் குறிப்பிட்ட இனங்களைச் சேர்ந்தவர்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கின்றன.

அதனால், ஆயுதக் கிளர்ச்சிக் கடந்த காலம் ஒன்றைக் கொண்ட அரசாங்கத்தின் தலைவர்கள் படைப்புக்களை பழைய அளவுகோல்களின் அடிப்படையில் அன்றி அவர்கள் கொண்டு வரப் போவதாக பிரகடனம் செய்துவரும் "புதிய அரசியல் கலாசாரச் "சிந்தனையின் பிரகாரம் நோக்குவதே நல்லிணக்கத்துக்கு உகந்தது. சமூகங்களுக்கு இடையில் குரோதங்களைத் தூண்டும் வகையில் கடந்த காலத்தை எவர் கையாண்டாலும் அதை எதிர்க்கும் பொதுப் பண்பு வேண்டும்.

# வடக்கில் மணல் விநியோகத்துக்கு பொதுவான நடைமுறை அவசியம்

### ஆளுநர் வேதநாயகன் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஏப். 24

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மணல் விநியோகத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அதனை முறைப்படுத்தி அனைத்து மன்றங்களுக்கும் பொதுவானதொரு நடைமுறையை உடனடியாக அறிமுகப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், உள்ளூராட்சி ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஆகிய அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் தலைமையில் நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது ஆளுநர் வழங்கிய முக்கிய வழிகாட்டல்கள் மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணத் திறைசேரிக்கான நிதி வருவாயை அதிகரிக்கும் வகையில் புதிய பொறிமுறைகள் அவசியமாகும். குறிப்பாக, "குடிபுகு சான்றிதழ்" பெறுவதை உறுதிப்படுத்தக் கண்காணிப்பு பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். இந்தச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாமல் வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களை அடையாளப்படுத்தி, அவற்றுக்கு எதிரான முதற்கட்ட நடவடிக்கையாக அறிவித்தல்களை காட்சிப்படுத்த வேண்டும். இது தொடர்பான மாதாந்த முன்னேற்ற அறிக்கையை உள்ளூராட்சி ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான கடைகளை பெற்றுக்கொண்ட உரிமையாளர்கள், அவற்றை விதிகளுக்கு முரணாக வேறு நபர்களுக்கு மாற்றியுள்ளனர். இது தொடர்பான குழப்பங்களை தீர்க்க விசேட குழுவொன்றை அமைத்து ஆராய்ந்து, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேநேரம் வடக்கு மாகாணத்தில் "லஞ்சீற்" கட்டுப்பாட்டு விவகாரத்தில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றத்தை தொடர்ந்து தக்கவைக்க வேண்டும். இதற்காகவும் விசேட கண்காணிப்பு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். அத்துடன், வாழையிலை பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட சிறுவர் பூங்காக்களில் உள்ள விளையாட்டு உபகரணங்களின் தரம், பாதுகாப்பு மற்றும் அவற்றின் போதாமை குறித்து பொது மக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர் விசேட கவனம் செலுத்தினார். அதிகளவானோர் கூடும் பூங்காக்களில் தரமான உபகரணங்களை விரைவாக கொள்வனவு செய்து நிறுவுமாறு மாநகர சபை ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்தார். மேலும், இப்பூங்காக்களில் கடைகள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளுக்கான அனுமதி வழங்கப்படும்போது, "பொலித்தீன் பாவனைத் தடை" என்ற நிபந்தனையை உள்ளடக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (எ)

### சட்டவிரோத மீன்பிடி:

# கட்டைக்காடு கடல் பகுதியில் 3 படகுகளுடன் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

மருதங்கேணி பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், கட்டைக்காடு கடல் பகுதியில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட மூன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 11: 40 மணியளவில், கடற்படையினர் ரோந்து படகுகள் மூலம் கட்டைக்காடு கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது சட்டவிரோதமாக மின்விளக்குகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மூன்று படகுகள் மற்றும் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் இருவர் கட்டைக்காடு முள்ளியான் பகுதியை சேர்ந்தவர்களும் மற்றைய நபர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த நபர் என்றும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், நேற்று 23 அதிகாலை 02:00 மணியளவில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

சட்டவிரோத மீன்பிடி முறைகளால் கடல் வளம் பாதிக்கப்படுவதை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட 03 டிங்கி படகுகள், இயந்திரங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளன. (எ)

# சிறீலங்கன் ஏர்லைன்ஸ் பெயரில் பாரிய நிதி மோசடி

கொழும்பு, ஏப். 24

சிறீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி பாரிய நிதி மோசடி ஒன்று இடம்பெற்று வருகிறது என்று பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வட்ஸ்எப் ஊடாக அந்த நிறுவனத்தின் சேவை என்று நம்பவைத்து தொடர்புகளை ஏற்படுத்தி, மூன்று போலி இணையத்தளங்கள் மூலம் 'SriLankan.apk' என்ற செயலியை தரவிறக்கம் செய்யத் தூண்டுவதன் வழியாகவே இந்த மோசடி அரங்கேற்றப்படுகிறது.

இந்தச் செயலியானது ஓர் அபாயகரமான "பேங்கிங் ட்ரோஜன்" மென்பொருள் என்றும், இதனை நிறுவுவதன் மூலம் தொலைபேசியை தொலைதூரத்தில் இருந்து கட்டுப்படுத்தும் அனுமதியை மோசடியாளர்கள் பெற்றுக்கொள்வதாகவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதன் மூலம் தனிப்பட்ட இரகசியத் தரவுகள் திருடப்படுவதுடன், ஒரு பணப்பரிமாற்றத்தைச் செய்ய வைப்பதன் ஊடாக ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொல், வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் உறுதிப்படுத்தல் தரவுகளைப் பெற்று சட்டவிரோதமாக வங்கிக் கணக்குகளுக்குள் நுழைந்து பணத்தை திருடுகின்றனர்.

இந்த மோசடிக்காக 077, 45 58 361, 011, 77 71 979, 074, 11 42 208, 077, 57 91 209 மற்றும் 074, 32 68 200 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. உடனடி நிதி இலாபங்களை எதிர்பார்த்து பொதுமக்கள் இவ்வாறான மோசடிகளில் சிக்க வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு






**மேடம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் தனலாபம் உண்டு. நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**இடபம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலை முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்பு தன்மை தேவைப்படும்.

**கடகம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**சிம்மம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வாகன வசதிப் பெருகும்.

**கன்னி**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**தனுசு**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தெளிவு பிறக்கும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபவிஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் திடீர் திருப்பம் வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்வீர்கள்.

**கும்பம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள்.

**மீனம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு மே 29 இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 24

கிரிஷ் கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மே மாதம் 29 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ணா சுவந்துருகொட முன்னிலையில் அழைக்கப்பட்டது. இதன்போது, பிரதிவாதியான நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். அதனைத் தொடர்ந்து, இந்த வழக்கை மே மாதம் 29 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இலங்கையில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதாகக் கூறி, இந்தியாவின் கிரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபாயைப் பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபரால் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

# பொலிஸ் ஆட்சேர்ப்பு வயது எல்லை சமூக வலைத்தள தகவல்கள் பொய்

## பொலிஸ் தலைமையகம் விளக்கம்

கொழும்பு, ஏப். 24

இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் விசேட அதிரடிப் படைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பயிலுநர் அதிகாரிகளின் வயது எல்லை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் தகவல்கள் குறித்து பொலிஸ் தலைமையகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் சேவையின் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில் கடந்த மார்ச் 27ஆம் திகதியிடப்பட்ட 2482 இலக்க அரச வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் நிகழ்நிலை ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி எதிர்வரும் மே 08ஆம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தமானியின் படி வயது எல்லைகளாக, பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்: 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட அனைத்து பதவிகளுக்குமான வயது எல்லை 28 வயது வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்திகள் முற்றிலும் உண்மையற்றவை என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இவ்வாறான போலித் தகவல்களை பரப்புபவர்களைக் கண்டறிய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறான போலிச் செய்திகளை நம்ப வேண்டாம் எனவும், அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிருப்பின் மாத்திரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து நேர்முக பரீட்சைகளில் கலந்துகொள்ளுமாறும் விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## தாளையடி குடிநீர் தீவகம் வருகை

# இணைப்புகளை பெற்றுக்கொள்வதில் வேலணை பிரதேச மக்கள் மும்முரம்!

யாழ்ப்பாணம், ஏப். 24

மருதங்கேணி தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தற்போது தீவகப் பிரதேசத்தின் அநேக பகுதிகளுக்கு குடி நீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் வேலணை பிரதேசத்தின் பல வட்டாரங்களில் மக்கள் தமக்கான குடிநீரை பெற்றுக்கொள்வதற்கான இணைப்புகளை மேற்கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

தீவக மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்னையான குடிநீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கமைய தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு திட்டம் பல்வேறு தரப்பினரது அரசியல் அழுத்தங்கள் தடைகளுக்கு மத்தியில் கொண்டுவரப்பட்டு இன்று பயன்பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த வாய்ப்பை தாமும் அனுபவித்துக்கொள்ளும் வகையில் தற்போது வேலணை பிரதேச மக்கள் தமக்கான குடிநீர் இணைப்புகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்குரிய குழாய் பொருத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொலிஸ் சுற்றிவளைப்பு: 551 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஏப். 24

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 551 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 27, 804 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 16 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 228 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 177 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய 90 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 64 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,123 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## காட்டு யானை தாக்கி மன்னாரில் ஒருவர் பலி

மன்னார், ஏப். 24

மன்னார் - மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

காட்டு யானை தாக்கியதில் காயமடைந்த நபர் முருங்கன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என்று மடு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பன்னிவெட்டுவான் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கை: ஒன்றரை இலட்சம் பேர் இதுவரை கைது

**அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்**

கொழும்பு, ஏப். 24

போதைப்பொருளுக்கு எதிரான "முழு நாடும் ஒன்றாக" திட்டத்தின் கீழ் இதுவரையான காலப்பகுதியில் ஓர் இலட்சத்து 52,957 பேர் கைது செய்யப்பட்டனர். 1979 பேர் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுய விருப்பத்தின் அடிப்படையில் புனர்வாழ்வு பெறுவதற்கு இணக்கம் தெரிவித்தவர்களின் வீதம் அதிகரித்துள்ளதால் 06 குறுகியகால சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களை அமைப்பதற்கும், அதற்குத் தேவையான பணிக்குழாமினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அண்மைக்காலத்தில் "முழு நாடும் ஒன்றாக" போதைப் பொருள் தடுப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு இணையாக சுயமாக முன்வந்து சிகிச்சை சேவைகளை நாடுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், சிகிச்சை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தற்போதுள்ள வதிவிட வசதிகள் போதுமானதாக இல்லை.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில், கட்டமைக்கப்பட்ட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகளை விரிவாக்கம் செய்யவேண்டிய அவசர தேவைகள் மேலெழுந்துள்ளன. அதற்குத் தீர்வாக சுயமாக சிகிச்சைக்காக முன்வருகின்றவர்களுக்கு குறுகியகால சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமாக பரிமாற்றம் செய்வதற்குப் பொருத்தமான, 06 குறைப்பயன்பாட்டு அரச கட்டடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

குறித்த நிலையங்களை அரச வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முழு நாடும் ஒன்றாக போதைப் பொருள் ஒழிப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இந்த மாதம் வரையான காலப்பகுதியில் பெருந்தொகையான போதைப்பொருட்கள், துப்பாக்கி மற்றும் ஆயுதங்கள் மீட் கப்பட்டன. அத்தோடு, சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதற்கமைய இக்காலப்பகுதியில் 1912 கிலோகிராம் ஹெறோயின்,1976.9 கிலோகிராம் ஐஸ், 271.39 கிலோ கிராம் கொக்கைன், 5126 கிலோகிராம் கஞ்சா, 77 இலட்சம் கஞ்சா செடிகள் மற்றும் 11 இலட்சம் பல்வேறு வகையான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஓர் இலட்சத்து 52 ஆயிரத்து 957 பேர் கைது செய்யப்பட்டனர். 282 சட்ட விரோத சொத்துக்கள் முடக்கப்பட்டன. அத்துடன் 2595 பேர் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டனர்"- என்றார். (எ)

# லொறியிலிருந்து கொட்டிய கற்கள்: வீதிப் போக்குவரத்துக்கு பாதிப்பு

கொழும்பு, ஏப். 24

கொழும்பிலிருந்து காலி நோக்கிப் பயணித்த லொறி ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்ட கருங் கற்கள் வீதியில் கொட்டிதன் காரணமாக, களுத்துறை - வெட்டுமகடை பகுதியில் வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை கொழும்பிலிருந்து காலி நோக்கிச் சென்ற லொறி ஒன்றின் பின்வாசல் கதவு திடீரென திறக்கப்பட்டதால், அதிலிருந்த கருங் கற்கள் வீதியில் கொட்டின.

சுமார் 800 மீற்றர் தூரம் வரை வீதியில் கற்கள் கொட்டியுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் கொட்டிய கற்களால் சறுக்கி விழுந்து நான்கு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகின. பாதுகாப்பற்ற முறையிலும் அஜாக்கிரதையாகவும் கற்களை ஏற்றிச் சென்ற குறித்த லொறி, பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபச்சார விடுதி முற்றுகை

**பொலிஸாரால் நால்வர் கைது**

கம்பஹா, ஏப். 24

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளுகஹ சந்தி பகுதியில், மசாஜ் நிலையம் என்ற போர்வையில் சட்டவிரோதமாக இயங்கிவந்த விபச்சார விடுதி பொலிஸாரால் சுற்றிவளைக் கப்பட்டதுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

பேலியகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு இந்த விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, குறித்த விடுதியின் முகாமையாளர் மற்றும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட மூன்று பெண்கள் என மொத்தம் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட முகாமையாளர் 31 வயதுடையவர் எனவும் பெண்கள் 25 மற்றும் 29 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

# இலங்கை பிரஜைகளின் ஆயுட்காலம் அதிகரிப்பு

**சுகாதார அமைச்சு தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 24

தேசிய தடுப்பூசி திட்டத்தின் மூலம் கடந்த 15 ஆண்டுகளில் இந்த நாட்டு மக்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய தடுப்பூசி திட்டத்தின் ஊடாக குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதன் மூலம் பல நோய்கள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன என்று தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பிரதான தொற்றுநோய் விசேட மருத்துவ நிபுணர் பாலித கருணாபேம தெரிவித்தார்.

இன்று முதல் ஆரம்பமாகும் உலக நோய் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு, சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நாங்கள் ஏப்ரல் 24 முதல் 30 வரை உலக நோய் எதிர்ப்பு வாரத்தை கொண்டாடுகிறோம். நோய் எதிர்ப்பு தன்மையில் இலங்கை மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. 1978 ஆம் ஆண்டு முதல் எமது நாட்டில் தேசிய தடுப்பூசி திட்டம் நடைமுறையில் உள்ளது. இதன் காரணமாக தடுப்பூசிகள் மூலம் குழந்தைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். போலியோ மற்றும் ருபெல்லா போன்ற நோய்களை இலங்கையிலிருந்து ஒழிக்க முடிந்தது. தடுப்பூசிகள் காரணமாக ஏனைய நோய்களைத் தடுத்துக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் காரணமாக, கடந்த 15 ஆண்டுகளில் இலங்கையர்களின் ஆயுட்காலம் அதிகரிக்கவும், குழந்தை இறப்பு வீதம் குறையவும் தேசிய தடுப்பூசி திட்டம் முக்கியமானதாக அமைந்துள்ளது"- என்றார். (எ)

# மோட்டார் சைக்கிள் மீது மரம் முறிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்தார்

இரத்தினபுரி, ஏப். 24

மோட்டார் சைக்கிள் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு எம்பிலிபிட்டிய, மஹாவலி நிலநிவச வீதிப் பகுதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள் மீது மரம் முறிந்து விழுந்ததில் அதன் சாரதியும் பின்னால் அமர்ந்து பயணித்த பெண்ணும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் முன்னரே சாரதி உயிரிழந்ததுடன், காயமடைந்த பெண் அதே மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவர் பல்லேகம பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# 2026 இல் வெளிநாட்டு தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் 26. 5 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 24

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வெளிநாட்டுத் தொழிலாளர்களால் இந்த நாட்டுக்கு அனுப்பப்பட்ட பணவனுப்பல்கள், கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 26. 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளை மேற்கோள் காட்டி பணியகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதியில் 2.294 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுத் தொழிலாளர் பணவனுப்பல்களாக கிடைத்தன. இதன்படி, ஜனவரி மாதத்தில் 751 மில்லியன் டொலர்களும், பெப்ரவரி மாதத்தில் 729 மில்லியன் டொலர்களும், மார்ச் மாதத்தில் 815 மில்லியன் டொலர்களும் கிடைத்தன.

2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பெறப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர் பணவனுப்பல்களின் அளவு 1,815 மில்லியன் டொலர்களாகும். அரசாங்கத்தின் நிதி மீதான நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் தொழிலாளர்கள் சட்டபூர்வமான வழிகளை பயன்படுத்துவதற்கு பணியகத்தால் ஊக்குவிக்கப்பட்டமை ஆகியவையே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்று பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் இறுதி வரை 62,145 நபர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை, மட்டக்களப்பில் மின்னல் தாக்கம் ஏற்படும்

கொழும்பு, ஏப். 24

நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய, தென், ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் இடியுடன் கூடிய மழையும், மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்று வீசக்கூடும். எனவே, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

இதன்படி, வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு பின்வரும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

பாதுகாப்பான இடங்களை நாடவும். மரங்களுக்கு அடியில் நிற்பதைத் தவிர்க்கவும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது வயல்வெளிகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் நீர் நிலைகள் போன்ற திறந்த வெளிப்பகுதிகளில் இருப்பதைத் தவிர்க்கவும்.

மின்சாரத்துடன் இணைக்கப்பட்ட தொலைபேசிகள் மற்றும் மின் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

மோட்டார் சைக்கிள், ட்ராக்டர்கள் மற்றும் படகுகள் போன்ற திறந்த வாகனங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

வீழ்ந்துள்ள மரங்கள் மற்றும் மின்சார கம்பிகள் குறித்து அவதானமாக இருக்கவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொலிஸ் அதிகாரி படுகொலை குற்றவாளிக்கு மரண தண்டனை

கொழும்பு, ஏப். 24

பத்தேகம பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றுக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை படுகொலை செய்த குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

18 ஆண்டுகால நீண்ட வழக்கு விசாரணைக்கு பின்னர், பலபிட்டிய மேல் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பத்தேகம பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சுட்டுக்கொலை செய்ததாக குற்றம் சுமத்தி, நபர் ஒருவரும் மற்றும் மூன்று பெண்களுக்கு எதிராக பொலிஸாரால் பலபிட்டிய மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நான்காவது பிரதிவாதிக்கு மரண தண்டனையும், ஏனைய மூவரையும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்தும் பலபிட்டிய மேல் நீதிமன்ற நீதிவான் ருசிர வெலிவத்த உத்தரவிட்டார்.

2008 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி பத்தேகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய திலீப் குமாரசிங்க மற்றும் ஜகத் நந்தன ஆகிய இரு அதிகாரிகளும் சுற்றிவளைப்பு ஒன்றுக்காக சென்றிருந்தனர்.

அங்கு, பலாபிட்டிய ரந்தொம்பே பகுதியைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திலீப் குமாரசிங்க என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். (எ)

# பீடி இலைகளுடன் பெண் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 24

வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைக்கால பகுதியில் புதன்கிழமை மதியம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில், சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருமளவிலான பீடி இலைகளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சுமார் 35 உரைகளில் பொதி செய்யப்பட்டிருந்த 1,126.75 கிலோ கிராம் எடையுள்ள பீடி இலைகள் இதன்போது கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மட்டக்களப்பு, அம்பாறையில் பலத்த மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஏப். 24

நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் காலை வேளையிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, அம்பாந்தோட்டையில் இருந்து காலியில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

மாகாண குறியீடு அற்ற

# புதிய வாகன இலக்கத் தகடுகள் மே மாத இறுதியில் விநியோகம்

கொழும்பு, ஏப். 24

புதிய வாகனங்களுக்கான தரப்படுத்தப்பட்ட பதிவு இலக்கத் தகடுகளை எதிர்வரும் மே மாத இறுதியிலிருந்து விநியோகிக்க முடியும் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு திணைக்கள அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்த போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

யுத்த காலத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக இலக்கத் தகடுகளில் மாகாணங்களை அடையாளப்படுத்தும் குறியீடுகள் மற்றும் "Frequency ID" பயன்படுத்தப்பட்டன. தற்போது பொலிஸாரிடம் அதனை சரிபார்ப்பதற்கான கருவிகள் இல்லாமை மற்றும் பாதுகாப்பு தேவை குறைந்துள்ளதால், மாகாண குறியீடுகளை நீக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வாகன உரிமையாளர்கள் தங்களது விருப்பமான பெயர்களை இலக்கத் தகடுகளில் பொறித்துக்கொள்வதற்கான விசேட முறைமை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (எ)

# பிரதி கல்வி அமைச்சரின் வாகனம் விபத்தில் சிக்கியது

கொழும்பு, ஏப். 24

பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியது.

புதன்கிழமை இரவு அவர் கொழும்பிலிருந்து ஹற்றன் ஊடாக நுவரெலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது, கித்துல்கல பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த வாகனம் வீதியை விட்டு விலகி, மின் கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின் போது பிரதி அமைச்சருக்கோ அல்லது வாகனத்தை செலுத்திய சாரதிக்கோ எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், விபத்தினால் வாகனத்துக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டன.

சம்பவம் தொடர்பில் கித்துல்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, ஏப். 24

நாட்டின் இருவேறு பகுதிகளில் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கல்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹகல்கடவல பகுதியில், நிக்கவரட்டிய பிரதேச போக்குவரத்து பிரிவின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட வாகன சோதனையின் போது, பாரியளவிலான போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 116 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 20 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் கல்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் நேற்று முன்தினம் கல்கமுவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவரை 03 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பதாலகம பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடமத்திய மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட அதிரடி சோதனையின் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 101 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முழு அமைச்சரவையும்...

இருக்கும் கடப்பா டுகளுக்கு மதிப்பளித்து, முழு அமைச்சரவையும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை கூட்டு எதிர்க்கட்சி நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவு மோசடியில் அமைச்சரை மாத்திரம் பலிகொடுத்துவிட்டு, அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாது. இது ஒரு மிகப்பெரிய மோசடித் திட்டமாகும். இவற்றில் எதனையும் தனித்துச் செய்வதற்கு அமைச்சருக்குத் திறமையோ அல்லது அதிகாரமோ இருக்கவில்லை. இவை அனைத்திற்கும் அரசாங்கத்தின் முழுமையான பங்களிப்பு இருந்தது.

அரசாங்கத்தின் பூரண பங்கேற்பின் காரணமாகவே, இந்த பாரிய மோசடியை படிப்படியாக முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. இவற்றை அமைச்சரால் தனித்துச் செய்திருக்கவே முடியாது. ஏனெனில் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் அல்ல. கடந்த காலங்களில் நிலக்கரி விநியோகம் தொடர்பாக எவ்வித அனுபவமும் அந்த நிறுவனத்திற்கு இருக்கவில்லை. இவ்வாறானதொரு நிறுவனத்தைத் தெரிவு செய்து, இவ்வளவு பெரிய ஒப்பந்தத்தை வழங்கியதன் பொறுப்பை அமைச்சரின் மீது மட்டும் சுமத்துவது எந்த வகையிலும் நியாயமற்றது. முழு அரசாங்கமும் ஒன்றிணைந்து, அனுமதி வழங்கி, ஒரு கூட்டு வேலைத்திட்டமாகவே இதனைச் செய்திருக்கிறது- என்றார். (அ)

## ரணில், ராஜபக்ஷ...

பயணம் மேற்கொண்டார். இதன்போது வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனி வரும் அரசுகள் முற்போக்கானவையாகவே இருக்கும். பழைய அரசுகள் போன்று இனிமேல் அரசுகள் அமையாது.

எனவே பயப்படவேண்டியவர்கள் தோல்வியடைந்த அரசியல் கட்சிகளில் இருப்பவர்களே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கை வெளிவரும்போது, ஊழல் தொடர்பான அறிக்கைகள் வெளிவரும்போது என்ன நடக்கும் என்று நீங்கள் பாருங்கள். அவர்களால் மீண்டும் ஆட்சி அமைக்கக்கூடிய நிலைமை இருக்குமா என்பதை நீங்கள் அப்போது அறிவீர்கள். அவர்கள்தான் உங்களை பயமுறுத்துகிறார்கள்.

மாகாண சபைத் தேர்தலை நாம் நடத்துவோம். ஆனாலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் ஒன்றும் தேவை. புதிய ஒரு சட்டம் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அதை செய்துவிட்டு தேர்தலை நடத்துவோம்-என்றார். (அ)

## தமிழக சட்டசபை...

தேர்தல் ஆணையத்தின் உத்தேச வாக்குப்பதிவு தரவுகளின்படி சுமார் 85 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தல்களில் பதிவான வாக்கு விகிதத்தில் இதுவே அதிகம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் முதல் முறையாக 85 விகிதத்துக்கும் மேல் வாக்குகள் பதிவாகியுள்ளன. இதற்கு முன்னர் அதிகபட்சமாக 2011-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் 78 விகிதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியிருந்தன. (அ)

## அபகரிக்கப்பட்ட...

நுழைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவம் குறித்து அவுஸ்திரேலிய தூதுவர் மற்றும் கடன் வழங்குநர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஹர்ஷன சூரியபெரும மேலும் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில் சைபர் குற்றவாளிகள் எமது கட்டமைப்புக்குள் நுழைய முயற்சிப்பதை நாம் அறிந்துகொண்டோம்.

இது தொடர்பான தகவல்கள் கிடைத்ததும், சம்பந்தப்பட்ட வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு எமது நாட்டிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு தடுத்து அதனைத் தீர்த்தோம்.

எனினும், இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவம் நடந்திருக்கலாம் என எமக்குத் தோன்றியது. அதனால்தான் கடந்தகாலக் கொடுப்பனவுகள் குறித்து ஆராயும் வேலைத் திட்டத்தைத் தயார் செய்தோம்.

அதற்காகக் காலம் எடுத்துக்கொண்டோம். அதன் போதே, கடந்த ஜனவரி மாதத்திலும் ஒரு கொடுப்பனவின் போது ஹெக்கர்களின் செயற்பாடு இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டது என அவர் குறிப்பிட்டார். (அ)

## அவுஸ்ரேலியாவுக்கு...

முகவர் நிலையத்திற்கும் திறைசேரிக்கும் இடையிலான நிதி கொடுக்கல் வாங்கல்களின்போது, மின்னஞ்சல் வாயிலாக பரிமாறப்பட்ட தகவல்களை இணைய ஊடுருவிகள் இடைமறித்து மாற்றியமைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு வழங்கப்படவேண்டிய ஒரு கொடுப்பனவு தொடர்பில், இதேபோன்ற முறையில் மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்ள ஊடுருவிகள் முயற்சித்துள்ளனர்.

இதன்போது வங்கிக் கணக்கு இலக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து சந்தேகம் எழுந்ததையடுத்து இந்த பாரிய மோசடி வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இது குறித்து இலங்கை பொலிஸாரின் கணினி குற்ற விசாரணை பிரிவு மற்றும் கணினி அவசர தயார்நிலை குழுவிற்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் மீள்செலுத்துகை தொடர்பான ஆரம்ப கட்ட தொடர்புகள் வரை விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதில், அவுஸ்திரேலியாவிற்கு செல்ல வேண்டிய நிதி ஊடுருவிகள் கணக்குகளுக்கு திசைதிருப்பப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த இரண்டு பிரதி திறைசேரி செயலாளர்கள் உள்ளடங்கிய உள்வாரி குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

அந்த குழுவின் பரிந்துரையின் பேரில், தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு மிகவும் நுணுக்கமான மற்றும் உணர்திறன் மிக்க விடயம் என்பதால், ஊடகங்கள் வாயிலாக அதிக விபரங்களை வெளியிடுவது குற்றவாளிகள் தப்பிச் செல்ல வழிவகுக்கும் என பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

"குற்றவாளிகளை கைது செய்வதும், திருடப்பட்ட நிதியை மீளப் பெறுவதுமே எமது முன்னுரிமை" என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக, இந்த விசாரணைகள் துரிதமாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேலதிக விபரங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்றும் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த மேலும் தெரிவித்தார். (அ)

## இலங்கையின்...

அவுஸ்திரேலியா உறுதியாக உள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் கீழ் உள்ள வெளி வளங்கள் திணைக்களத்தின் கணினி அமைப்பிற்குள் அனுமதியின்றி நுழைந்து நடந்த இணையவழித் திருட்டுச் சம்பவம் தொடர்பாக, சட்ட அமுலாக்க அமைப்புகளிடம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நிதி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த அறிவித்ததைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. (அ)

## சாவகச்சேரி விபத்து...

உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளிலும் கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் , கனரக வாகனச் சாரதியை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## அரச உத்தியோகத்தர்...

இதன்போது, சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்றுக்கொண்ட அரச உத்தியோகத்தர்கள், அந்த மொழிகளை முறையாகப் பயன்படுத்துகின்றனரா என்பது குறித்து மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில் நீதியமைச்சின் மேலதிக செயலாளர் வி. மதுமதி, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் சந்திரா விக்ரமசிங்க, அதன் பணிப்பாளர் நாயகம் ஷமிந்த மஹலேகம் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## அல்லைப்பிட்டி...

வாகனத்தை செலுத்தினார் என பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 17 வயது சிறுவனான அருள் பயஸ் உயிரிழந்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன் தினம் புதன்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது , கடந்த வழக்கு தவணையில், குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் விண்ணப்பம் செய்ததை அடுத்து நீதிமன்று விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றுமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பல வழக்குகள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதனால் கடும் வேலைப்பளு காரணமாக வழக்கு விசாரணைகளை மத்திய குற்றப்புலனாய்வு பணியகத்திற்கு பரப்படுத்துவதாக கடந்த 07ஆம் திகதி திகதியிடப்பட்ட கடிதம் ஊடாக மன்றுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவித்திருந்தார்.

அதனை தொடர்ந்து மத்திய குற்றப் புலனாய்வு பணியகம் வழக்கை பாரமெடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன் தினம் வழக்கு விசாரணையின்போது, மத்திய குற்றப்புலனாய்வு பணியக அதிகாரிகள் மன்றில் முன்னிலையாகி ஊர்காவற்துறை பொலிஸாரின் குறிப்பேடுகள், விசாரணை அறிக்கைகள் , சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் என்பவற்றை தாம் பாரம் எடுத்துள்ளதாகவும் , நீதிச்சேவை ஆணைக்குழுவின் சுற்றிக்கைக்கு அமைவாக துப்பாக்கிகள் யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் , தாம் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக மன்றில் தெரிவித்தனர்.

இதனை அடுத்து, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நம்பிக்கை தரும் வகையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்திய மன்று , சந்தேக நபர்களை விரைவாக கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு உத்தரவிட்டது.

அத்துடன் வழக்கினை எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதிக்கு மன்று திகதியிட்டது. (அ)

## வடக்கு மணல்...

சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஆகிய அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் தலைமையில் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது, ஆளுநர் முக்கிய வழிகாட்டல்களை வழங்கினார்.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணத் திறைசேரிக்கான நிதி வருவாயை அதிகரிக்கும் வகையில், புதிய பொறிமுறை அவசியமாகும்.

குறிப்பாக, "குடிபுகு சான்றிதழ்" பெறுவதை உறுதிப்படுத்தக் கண்காணிப்பு பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

இச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாமல் வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களை அடையாளப் படுத்தி, அவற்றுக்கு எதிரான முதற்கட்ட நடவடிக்கையாக, அறிவித்தல்களைக் காட்சிப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான மாதாந்த முன்னேற்ற அறிக்கையை, உள்ளூராட்சி ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கடைகளை பெற்றுக்கொண்ட உரிமையாளர்கள், அவற்றை விதிகளுக்கு முரணாக வேறு நபர்களுக்கு மாற்றியுள்ளனர்.

இது தொடர்பான குழப்பங்களைத் தீர்க்க விசேட குழுவொன்றை அமைத்து ஆராய்ந்து, உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் "லஞ்ச்சீற்" கட்டுப்பாட்டு விவகாரத்தில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றத்தை தொடர்ந்து தக்கவைக்க வேண்டும்.

இதற்காகவும் விசேட கண்காணிப்பு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

அத்துடன், வாழையிலைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், உள்ளூராட்சி மன்றங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட சிறுவர் பூங்காக்களில் உள்ள விளையாட்டு உபகரணங்களின் தரம், பாதுகாப்பு மற்றும் அவற்றின் போதாமை குறித்து, பொது மக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில், ஆளுநர் விசேட கவனம் செலுத்தினார்.

அதிகளவானோர் கூடும் பூங்காக்களில், தரமான உபகரணங்களை விரைவாகக் கொள்வனவு செய்து நிறுவுமாறு, ஆளுநர், மாநகர சபை ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இப்பூங்காக்களில் கடைகள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளுக்கான அனுமதி வழங்கப்படும் போது, "பொலித்தீன் பாவனைத் தடை" என்ற நிபந்தனையை உள்ளடக்க வேண்டும் என, ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில், மாகாண வீடமைப்புத் திட்டத்தின் முன்னேற்றம் சிறப்பாக உள்ளதாக, அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்த ஆணையாளர், ஆளணி வெற்றிடங்களால் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும்,

வழமையான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் "டித்வா" பேரிடர் மீள்கட்டுமான நிதி ஆகியவற்றின் கீழ் பணிகள் முறையாக இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், பொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப, திட்டங்களை எவ்வாறு வினைத்திறனாக முன்னெடுப்பது என்பது குறித்து, நிதிப் பிரதிப் பிரதம செயலாளர் விளக்கமளித்தார்.

சுற்றுலாத்துறையை பொறுத்தவரை, அடையாளம் காணப்பட்டுள்ள சில புதிய திட்டங்கள் குறித்து, மேலதிக நேரடிக் கள ஆய்வுகளின் பின்னரே இறுதி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் காணி ஆணையாளர் அலுவலகங்களின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதில், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர், மாநகர சபை ஆணையாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# கணினி அமைப்புக்குள் ஊடுருவிகள் ஆரம்பமாகியது விசேட விசாரணை!

## நிதியமைச்சின் முறைப்பாட்டை அடுத்து

கொழும்பு, ஏப். 24

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கணினி அமைப்பிற்குள் இணைய ஊடுருவிகள் நுழைந்து மேற்கொண்ட திருட்டுச் சம்பவம் தொடர்பில் தற்போது விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் போதே இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்த தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

இது தொடர்பாக இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவு, காவல்துறையின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியின் நிதி உளவறிதல் பிரிவு ஆகியவற்றில் அமைச்சு முறைப்பாடுகளைச் செய்துள்ளது.


இந்த சம்பவம் குறித்து நடத்தப்பட்ட முதற்கட்ட உள்வாரி விசாரணைகளின் அடிப்படையில், சில அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், விசாரணை முன்னெடுப்புகளுக்காகச் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் தகவல்களையும் வழங்கியுள்ளதாக அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையிலான உடன்படிக்கைகளுக்கு அமைய, சர்வதேச ஒருங்கிணைப்புடன் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தாண்டிக்குளத்தில் விபத்து; வயோதிப பெண் உயிரிழப்பு

## ரயிலுடன் மோதியது ஓட்டோ



வவுனியா, ஏப். 24

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து திருநாள்குளம் நோக்கி பயணித்த ஓட்டோ, கொழும்பு - யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் சம்பவ இடத்திலேயே குறித்த பெண் உயிரிழந்ததுடன், ஓட்டோச் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த சாரதி வவுனியா பொதுவைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மின் தடை அமுல்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை!

கொழும்பு, ஏப். 24

நாட்டில் மின்சாரத் தடையை அமுல்படுத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமையாகும் என அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

செலவு குறைந்த மற்றும் நம்பகமான மின் உற்பத்தி ஆதாரங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய நிலைமை முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

2025-2026 ஆம் ஆண்டிற்கான நிலக்கரி கொள்வனவு செயன்முறையில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாகத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போனால், அதன் சுமையை மக்கள் மீது சுமத்தப்போவதில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியும் இந்த நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தியுள்ளார். நிலக்கரி விநியோகத்தில் தவறிழைத்த நிறுவனங்களிடமிருந்து அபராதங்களை அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

அவ்வாறு அறவிடப்படும் தொகை போதுமானதாக இல்லையெனில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நிதிச் சுமையை திறைசேரியோ அல்லது பொதுமக்களோ ஏற்கத் தயாராக இல்லை - என்றார். (அ)

# 2.5 மில்லியன் டொலர்கள் மாயம் இலங்கை மீண்டும் கடனாளியா?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி



கொழும்பு, ஏப். 24

வெளிநாட்டு கடன் தவணைக்காக ஒதுக்கப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மாயமானது தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கடும் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிதி உரிய கடன் வழங்குநரைச் சென்றடையாத நிலையில், இலங்கை தொழில்நுட்ப ரீதியாக மீண்டும் ஒரு “கடன் தவணையை செலுத்தத் தவறிய“ நாடாக மாறியுள்ளதா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இறையாண்மைக் கடன் முகாமைத்துவப் பணிகள் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து திறைசேரியின் அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட போதே தாம் எச்சரித்ததாக ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய நிதிச் சந்தைகளைக் கையாளுவதற்குத் தகுதியான மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களை நியமிக்குமாறு அரச நிதி பற்றிய குழு வலியுறுத்தியும், திறைசேரி அதனைப் பொருட்படுத்தவில்லை என அவர் குற்றம் சாட்டினார்.

குறித்த வெளிநாட்டுத் தரப்புக்கு ஐந்து கடன் தவணைகள் கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இது வெறும் கவனக்குறைவு அல்ல, ஒரு பாரிய நிர்வாகத் தோல்வி என விமர்சித்துள்ளார்.

பொது நிதியைக் கையாளுவதில் பாராளுமன்றத்துக்கே அரசியலமைப்பு ரீதியான பொறுப்பு உள்ளது என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனை ஒரு அரசியல் பிரச்னையாகப் பார்க்காமல், மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உடனடியாகப் பொறுப்புக்கூறல் மற்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# சபாநாயகரைச் சந்தித்தது பிரான்ஸ் செனட் தூதுக்குழு



கொழும்பு, ஏப். 24

பிரான்ஸின் செனட் சபையில் உள்ள பிரான்ஸ் - இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழுவினர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இலங்கைக்கும் பிரான்ஸிற்கும் இடையில் காணப்படும் நீண்டகால இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இச்சந்திப்பு அமைந்தது.

இந்தத் தூதுக் குழுவில் பிரான்ஸ் - இலங்கை பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவர் வலினா பௌலி ககன், குறித்த சங்கத்தின் பிரதித் தலைவர் டிடியர் மெரி, செனட்டர் லோரன்ஸ் முலர் ப்ரோன் ஆகியோருடன் பல அதிகாரிகளும் உள்ளடங்கியிருந்தனர்.

தூதுக்குழுவினரை வரவேற்ற சபாநாயகர், கடந்த எழுபது ஆண்டுகளாக பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட விழுமியங்களின் அடிப்படையில் இலங்கைக்கும் பிரான்ஸிற்கும் இடையில் நீடித்துவரும் இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்தார். பரஸ்பர புரிந்துணர்வை வலுப்படுத்துவதிலும், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும் பாராளுமன்ற இராஜதந்திரத்தின் வகிபாகத்தை அவர் வலியுறுத்தினார்.

டித்வா புயல் தாக்கத்திற்குப் பின்னர் பிரான்ஸ் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்ட சபாநாயகர், புயலுக்குப் பிந்தைய சூழ்நிலையையும், தற்போதைய மத்திய கிழக்கு நெருக்கடியால் எழும் சவால்களையும் அரசாங்கம் வெற்றிகரமாகக் கையாண்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டினார். (அ)

# பெயர் பொறித்த வாகன இலக்கத்தகடு; புதிய நடைமுறை விரைவில் அறிமுகம்!

கொழும்பு, ஏப். 24

மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத் தகடுகளில் தனிப்பயனாக்கப்பட்ட பெயர்களை உள்ளடக்கும் புதிய முறையை அறிமுகப்படுத்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அரசு நிதி பற்றிய பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில் திணைக்கள அதிகாரிகள் இந்தத் தகவலை அண்மையில் வெளியிட்டனர்.

தற்போது நடைமுறையிலுள்ள கணினி அமைப்பு மிகவும் பழமையானது என்றும், அதில் உள்ள தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளதாகவும் அதிகாரிகள் குழுவிடம் சுட்டிக் காட்டினர்.

எனவே, தற்போதுள்ள கணினி அமைப்பை நவீனமயப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதுள்ள கணினி அமைப்பு புதுப்பிக்கப்பட்ட பின்னர், ஆறு மாத காலத்திற்குள் இந்த விசேட திட்டத்தை ஆரம்பிக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட இலக்கத் தகடுகளை முன்பதிவு செய்வதற்காக 100,000 ரூபா முதல் 1 மில்லியன் ரூபா வரை கட்டணம் அறவிடப்படுகிறது. ஏற்கனவே சிலர் ஒரு மில்லியன் ரூபா செலுத்தி இவ்வாறான இலக்கத் தகடுகளைப் பெற்றுள்ளனர்.

விசேட இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொண்ட வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக அதிகாரிகள் தரவுகளை முன்வைத்தனர்.

அதன்படி, 2023ஆம் ஆண்டில் 11 வாகனங்களும், 2024ஆம் ஆண்டில் 46 வாகனங்களும், 2025ஆம் ஆண்டில் 692 வாகனங்களும் விசேட இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொண்டுள்ளன.

இதேவேளை 2026 ஏப்ரல் 17 ஆம் திகதி வரை 436 நபர்கள் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இலக்கத் தகடுகளை முன்பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org